23—

சிறுசேமிப்புத் திட்டம்

***42029—திரு. கே. ஆறுமுகம்:**

மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் சிறுசேமிப்புத் திட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற தொகை எவ்வளவு?

(ஆ) இதன் மூலம் கிடைத்த ஊக்கத் தொகை எவ்வளவு?

(இ) அவை எவ்வகையில் செலவிட அனுமதிக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் சிறுசேமிப்புத் திட்டத்தின் மூலம் திரட்டப்பட்ட தொகை கீழ்க்கண்டவாறு:

1999–2000 ஆம் ஆண்டு 98.99 கோடி ரூபாய்.

2000–2001 ஆம் ஆண்டு 100.09 கோடி ரூபாய்.

2001–2002 ஆம் ஆண்டு 94.39 கோடி ரூபாய்.

2002–2003 ஆம் ஆண்டு 150.12 கோடி ரூபாய்.

2003–2004 ஆம் ஆண்டு 226.69 கோடி ரூபாய்.

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு சிறுசேமிப்புத் தொகை அதிகம் திரட்டப்பட்டதன் அடிப்படையில் கடந்த நான்கு ஆண்டுகளில் ஒப்பளிக்கப்பட்ட ஊக்கத் தொகை ரூபாய் 7.08 கோடியாகும்.

(இ) காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள இந்த ஊக்கத் தொகை அம்மாவட்டத்தின் ஊராட்சி ஒன்றியங்களில் சாலைகள் அமைத்தல், பழுதுபார்த்து மேம்படுத்துதல், ஏரி, மதகு பழுதுபார்த்தல், சிறு பாலம் கட்டுதல், நியாய விலைக் கடை, ஆரம்பப் பள்ளி, அங்கன்வாடி, சத்துணவுக்கூடம், ஆரம்ப சுகாதார நிலையம், தாய்–சேய் நல விடுதி, செவிலியர் குடியிருப்பு ஆகியவற்றின் கட்டடங்களைக்

2004 ஜூலை 27]

கட்டுதல், கழிவறை அமைத்தல் மற்றும் பழுதுபார்த்தல், ஊராட்சிகளின் குடிநீர்க் குழாய்கள் பழுதுபார்த்தல், ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்தல், ஊராட்சிகளுக்குத் தெருவிளக்கு மற்றும் மயான சாலை அமைத்துக் கொடுத்தல் போன்ற பணிகளுக்குச் செலவிட அனுமதிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏராளமான Pharmacy, Physiotherapy, Nursing, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்படித் தொடங்கப்பட்டுள்ள கல்லூரிகளில் ரூபாய் 20 இலட்சம் அளவிலே மாநில அரசுக்கு deposit செய்ய வேண்டும். இப்படி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சிறுசேமிப்புத் திட்டம் பற்றிய வினா. திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்பின் மூலமாக மைய அரசிலிருந்து கடந்த மூன்று ஆண்டுகளாக மாநில அரசுக்கு வரப்பெற்ற வருமானம் எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த வசூல் எவ்வளவு இருக்கிறதோ அந்த வசூலை முழுவதும் மாநில அரசுக்குத் தருகின்ற அணுகுமுறையைத் தற்போது மைய அரசு கடைப்பிடித்து வருகிறது. 1999–2000 ஆம் ஆண்டு 1604.74 கோடியாக இருந்த இந்த வருவாய் 2000–2001–ல் 1818.04 கோடியாக உயர்ந்தது. 2001–2002–ல் ரூ.1854.40 கோடியாக உயர்ந்தது; 2002–2003–ல் ரூ.2902.99 கோடியாக உயர்ந்தது; தற்போதைய 2003–2004 ஆம் ஆண்டில் அதிகப்படியான வசூலாக, மாநில அரசுக்கு இது கடன் உதவியாக மத்திய அரசிடமிருந்து பெறக்கூடிய அளவிற்கு ரூ.3968.63 கோடி என்ற அளவை எட்டியிருக்கிறது.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 24, திரு. ச. ராமராஜ், மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.